மத்திய நிறுவனங்களிற்கான இரண்டாம்நிலைக் கல்வித்துறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2024

மத்திய நிறுவனங்களிற்கான இரண்டாம்நிலைக் கல்வித்துறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செலவீனக்கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2020 திசெம்பர் 01 ஆம் திகதிய 4021 – எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் ஒன்பது மாகாணக் கல்வித்திணைக்களங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக செயற்படுகின்றது. நாட்டின் இரண்டாம் நிலைக் கல்வி முறையை வலுப்படுத்துதல், இரண்டாம் நிலை விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் மற்றும் வணிகம் (STMC) பாடநெறிகளின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துதல், கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மாகாண மற்றும் பாடசாலைகளின் ஆற்றலை வலுப்படுத்துதல் மற்றும் கல்வித்துறை முகாமைத்துவ ஆற்றலை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகவுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 608,000 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 3,200 மில்லியன் ஆகும். அதில் ரூபா 76,000 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 400 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித்தொகை ரூபா 532,000 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 திசெம்பர் 08 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செலவீனக் கூற்றினை உள்ளடக்கிய நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செவவீனக் கூற்றினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செவவீனக் கூற்றானது மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் 09 மாகாண கல்வி திணைக்களங்களுக்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செவவீனக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செவவீனக் கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட செவவீனக் கூற்றினை ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்கீட்டுக் குறைபாடு	தொகை ரூபா.	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
மீளாய்வாண்டில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழற்கல்வி அமைச்சினால், இரண்டாம் நிலைக் கல்வித் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் (SESIP) கீழ் ரூபா. 1,077,193,526 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், இத்தொகை இத்திட்டத்தின் செலவினமாகச் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, இத்திட்டத்தின் செலவினம் அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	1,077,193,526	இத்திட்டத்திற்கான திரட்டப்பட்ட நிதி அறிக்கை, செயற்திட்ட செயலாக்க ஆவணத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.	இத்திட்டத்துடன் தொடர்புடைய மொத்த செலவினமும் கணக்கில் காட்டப்பட வேண்டும்.

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
செயற்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் (PID) 17 ஆம் பந்தி	தேசிய வழிகாட்டல் குழு காலாண்டுக்கு ஒருமுறை கூட வேண்டும் என்ற நிபந்தனை இருந்தபோதிலும், அக்குழு 2024 ஆம் ஆண்டில் ஒரே ஒரு முறை மட்டுமே கூடியிருந்தது.	கருத்துக்கள் பெறப்படவில்லை	செயற்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் (PID) படி செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்றிட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

	செயற்பாடு	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		தாமதம்/ கணக்காய்வு விடயம்	தாமதத்திற்கான காரணம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
		எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம்	அடையப்பட்ட செயலாற்றல்				
(அ)	நிதிப்பயன்பாடு	ஐ.அ. டொலர் 56.10 மில்லியன்.	ஐ.அ.டொலர் 37.93 மில்லியன்.	2024ஆம் ஆண்டிற்காக 32 உப விநியோக இணைக்கப்பட்ட குறிகாட்டிகளுக்கு ஐ.அ.டொலர் 161.33 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், உப விநியோக இணைக்கப்பட்ட குறிகாட்டிகள் அடையப்படாததன் காரணமாக, இத்தொகை 34.77 சதவீதத்தால் குறைக்கப்பட்டு ஐ.அ.டொலர் 56.10 மில்லியனாக மாறியது.	தேசிய கல்விக் கொள்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படாரமயால் ஆகும்.	தேசிய கல்விக் கொள்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படாமையால் 2023ஆம் ஆண்டிற்கான DLI இன் இலக்குகள் எதையும் எட்ட முடியவில்லை.	அமைச்சு தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.
(ஆ)	கடன் வழங்கல்	100%	63%	2021 முதல் 2025 வரை மொத்தம் ஐ.அ.டொலர் 400 மில்லியன். கடன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரை ஐ.அ.டொலர் 254.20 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இது மொத்தக் கடனில் 63 சதவீதமாகும்.	DLIsகளை அடைய முடியாமையாகும்.	எஞ்சிய இலக்குகளை அடைவதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டிற்கு, தேசிய கல்விச் சீர்திருத்தக் கொள்கை கட்டமைப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதே முதன்மைக் காரணமாகும்.	அமைச்சு தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.

(இ)	பரீட்சைகள் திணைக்களம்	12 நடவடிக்கைகள்	4 நடவடிக்கைகள்	உப வழங்கலுடன் இணைக்கப்பட்ட குறிகாட்டிகள் 01ஐ (DLI 01) நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா. 4,076,230 செலவிடப்பட்டிருந்தது. எனினும், 12 நடவடிக்கைகளில் 08 நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன.	புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கான கொள்கை அனுமதிகளைப் பெறுவதில் ஏற்பட்ட தோல்வியாகும்.	இறுதி கொள்கை முடிவுகள் எடுக்கப்படும் வரை, நிதிச் செலவுகளுடன் கூடிய பல நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்தது.	அமைச்சு தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.
(ஈ)	என்ஜஈ இன் செயன் முன்னேற்ற அறிக்கை	24 நடவடிக்கைகள்	6% இலிருந்து 67% வரை	24 நடவடிக்கைகளுக்காக 2024 திசெம்பர் 31ஆம் திகதியன்றிருந்தவாறு ரூபா.12,182,416 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.	புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இன்னும் உறுதி செய்யப்படாமையாலாகும்.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	அமைச்சு தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.
(உ)	என்ஜஈ இன் நடவடிக்கைகள்	31 நடவடிக்கைகள்	0	ரூபா.24,907,000 மதிப்பிலான 31 நடவடிக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவை 2024 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்படவில்லை.	புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இன்னும் உறுதி செய்யப்படாமையாலாகும்.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	அமைச்சு தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.

3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
(அ)	பயன்பாட்டு வள மையங்களுக்காக ரூபா. 493,062,994 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மின்னணு உபகரணங்கள், குறித்த குறிக்கோள்களுக்காகப்	ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்தல், நடத்துதல் மற்றும் சரிபார்த்தல் ஆகிய பொறுப்புகள் தேசிய கல்வி நிறுவனம் (NIE) மற்றும் ஏனைய தொடர்புடைய	எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	பயன்படுத்தப்படாமல் செயலற்றுக் கிடந்தன.	நிறுவனங்களுக்குரியதாகும்.	
(ஆ)	15 மாவட்டங்களில் உள்ள 15 தொழில்முறை மேம்பாட்டு மையங்கள் மற்றும் 105 பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள பயன்பாட்டு வள மையங்களில் ஆசிரியர்களுக்கான இணையவழிப் பயிற்சித் திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பயன்பாட்டு வள மையத்தில் இருந்த ரூபா.16,455,000 மதிப்பிலான மின்னணு உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் செயலற்றுக் கிடந்தன.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட முடிவை அடைவதற்காக இவ்வுபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	தீவு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள பயன்பாட்டு வள மையங்களை இணையவழியாக இணைப்பதன் மூலம் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழிகாட்டுதல்கள் தேசிய கல்வி நிறுவனத்தினால் (NIE) மேற்கொள்ளப்பட வேண்டும் என இருந்தபோதிலும், இந்த வள மையங்கள் தொடர்பான செயல்பாடுகள் எதுவும் தேசிய கல்வி நிறுவனத்தின் 2021 முதல் 2025 வரையிலான எந்தவொரு திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்காக, இந்தச் செயல்பாடு தேசிய கல்வி நிறுவனத்தின் செயல்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்

3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
(அ)	2024 சனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின்படி, வெளிநாட்டு உதவித் செயுற்திட்ட நிதியின்	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	சுற்றறிக்கைக்கு இணங்கி நடப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள் விலையுயர்ந்த விடுதிகளில் நடத்தப்படக் கூடாது என்றும், எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடையும் வகையில் குறைந்தபட்ச செலவில் அரசாங்கத்தினால் வசதிகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு முரணாக துல்கிரிய பகுதியில் உள்ள ஒரு விடுதியில் ரூபா. 3,768,072 செலவில் இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டிருந்தது.		
(ஆ)	07 வழங்கல் இணைக்கப்பட்ட குறிகாட்டிகள் (DLIs) தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பு 65 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளைக் (KPIs) கொண்டுள்ளது. மேலும், அவற்றுடன் தொடர்புடைய தரவுகளைச் சேகரிப்பதற்காக 09 மாகாணங்களையும் உள்ளடக்கிய தேசிய கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (NEMIS) ஒன்று கல்வி அமைச்சில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும், 2025 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் அதற்குரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.
(இ)	இத்திட்டத்தின் வழங்கலுடன் இணைக்கப்பட்ட குறிகாட்டிகள் 05 இன் (DLI 05) கீழ் தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் புத்தாக்க ஆய்வகங்களை 2021-2024 காலப்பகுதியில் ஒரு பாடசாலைக்கு ரூபா. 800,000 வீதம் மொத்தம் ரூபா.600,000,000 வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், இந்த 750 முதன்மைப் பாடசாலைகளுடன்	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் DLI இலக்குகளை அடைய வேண்டும்.

	இணைக்கப்பட்ட ஏனைய தொகுதிப் பாடசாலைகளுக்கும் இதன் நன்மைகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் 750 பாடசாலைகளில் 691 பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடு 2024 திசெம்பர் 10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந்த புத்தாக்க ஆய்வகங்கள் திருப்திகரமான மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		

3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
(அ)	தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் இலக்கு வைக்கப்பட்ட 13 பாடங்களின் தேர்ச்சி மட்டங்களை அதிகரிக்கும் நோக்கில், 2023 ஆம் ஆண்டில் 171 தேசிய பாடசாலைகளுக்கும் 579 மாகாண பாடசாலைகளுக்கும் ரூபா. 209,027,000 மானியமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், 26 தேசிய பாடசாலைகள் மற்றும் 57 மாகாண பாடசாலைகளின் முன்னேற்ற அறிக்கைகள் 2025 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, 2024ஆம் ஆண்டில் 154 பாடசாலைகளுக்கு ரூபா. 8,000,000 வழங்கப்பட்டிருந்த போதிலும், 16 தேசிய பாடசாலைகளும் 56 மாகாண பாடசாலைகளும் 2025 ஆகஸ்ட் 30 வரை முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை.	2023ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்களின் முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, மாகாண SESIP ஒருங்கிணைப்பாளர்களுக்கும் தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் வாட்ஸ்அப் மூலமாக அவ்வப்போது நினைவூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.	பாடசாலை மானியங்கள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய, அமைச்சு தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	க.பொ.த (உயர் தரம்) உயிரியல் முறைமைகள் தொழினுட்பவியல் (Bio Systems Technology) பாடத்தின் செய்முறைச் செயல்பாடுகளுக்காக, தெரிவு செய்யப்பட்ட 215 பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்குகளில் 2024 நவம்பர் 04	நிதி மானியம் கிடைத்துள்ளமை குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பாடசாலை மானியங்கள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய, அமைச்சு தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை

	அன்று ரூபா. 15,000,000 வைப்பிலிடப்பட்டிருந்த போதிலும், 2025 ஆகஸ்ட் 13ஆம் திகதியன்றிருந்தவாறு 158 பாடசாலைகளினால் ரூபா. 11,512,550 தொகை பயன்படுத்தப்படாமல் இருந்தது.		மேற்கொள்ள வேண்டும்.
(இ)	க.பொ.த (உயர் தரம்) தொழினுட்பவியல் பாடத்துறையின் பொறியியல் தொழினுட்பவியல் (Engineering Technology) பாடத்துடன் தொடர்புடைய உபகரணங்கள் மற்றும் நுகர்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக, 2024 நவம்பர் 26 அன்று 467 பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்குகளில் ரூபா.21,493,742 வைப்பிலிடப்பட்டிருந்தது. எனினும், ரூபா.17,763,588 பெறுமதியான மானியங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் 402 பாடசாலைகளிடமிருந்து 2025 ஆகஸ்ட் 30ஆம் திகதி வரையிலும் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்தத் தாமதத்திற்கு முக்கிய காரணம், பாடசாலை அதிபர்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணுவதற்கான முறையான தகவல் தொடர்பு பொறிமுறை இல்லாததேயாகும்.	பாடசாலை மானியங்கள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்பட்டனவா என்பதை உறுதி செய்ய, அமைச்சு தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(ஈ)	வழங்கலுடன் இணைக்கப்பட்ட குறிகாட்டிகள் எட்டப்படாததன் காரணமாக, 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக, விடுவிக்கப்பட்ட தொகையான 254,200,000 அமெரிக்க டொலருக்கு ரூபா.4,217,376,215 வட்டியாகவும், விடுவிக்கப்படாத தொகையான 145,800,000 அமெரிக்க டொலருக்கு ரூபா.85,875,966 கடப்பாட்டுக் கட்டணமாகவும் செலுத்த வேண்டியிருந்தது. இது தவிர, இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 2024ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா. 336,393,217 கடப்பாட்டுக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது.	மேலும் கடப்பாட்டுக் கட்டணங்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கும், நிதி விடுவிப்பை மேம்படுத்துவதற்கும் தேவையான சீர்திருத்தங்களை விரைவுபடுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.	குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் திட்டத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் அல்லது திட்டத்தை மறுசீரமைப்பதன் மூலம் கடப்பாட்டுக் கட்டணம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.
(உ)	வழங்கலுடன் இணைக்கப்பட்ட குறிகாட்டிகள் இலக்கம் 02 இன் கீழ், க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர் தரம்) ஆகிய பிரிவுகளின் ஒவ்வொரு தரத்திற்குமான பாடங்களை மேம்படுத்துவதற்காக, 2022 முதல் 2024 வரை தேசிய கல்வி நிறுவனத்திற்கு (NIE) ரூபா.	கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.	DLI இலக்குகளை அடைவதற்காக, செயற்திட்ட மேலாண்மை அலகு முறையான முன்னேற்றக் ஆய்வுகளை நடத்த வேண்டும்.

27,685,833 வழங்கப்பட்டது. எனினும், 2025 செப்தெம்பர் 15ஆம் திகதியன்றிருந்தவாறு, மேம்படுத்தப்பட்ட பாடங்கள் தொடர்பான தொகுதிகளின் எண்ணிக்கை குறித்து செயற்திட்ட மேலாண்மை அலகு முறையான விரிவான ஆய்வு எதையும் நடத்தியிருக்கவில்லை.